1972 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில இடங்களில் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதுபற்றி ஆராய்ந்து அதில் இடர்பாடுகள் இருக்குமானால் அதைக் களையச் செய்வதற்கு வேண்டியதைச் செய்யலாம். என்ன முறைகள் உள்ளன என்பது பற்றி பல்கலைக் கழகத்தோடு கலந்து ஆலோசித்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

தமிழ்நாடு புலவர்க் குழு.

* 621 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் புலவர்க் குழு அலுவலகக் கட்டட நிதிக்காக அரசு மானியம் வழங்கியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். ரூ.25,000-ஐ தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, முன்பிருந்த மாநில அரசு ஆஸ்தானக் கவிஞர்களை நியமித்தது போல் இந்தப் புலவர் குழுவிலிருந்து ஒருவரை அரசவைக் கவிஞர் என்று நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பேரவையில் பல ஆஸ்தான புலவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தனியாக ஆஸ்தானப் புலவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் நிதி அளித்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கட்டடம் எங்கே கட்டப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் புலவர் குழுவினர் தமிழ்நாட்டின் மையப் பகுதியாக விளங்குகிற திருச்சியில் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ரூபாய் 1 லட்சத்திற்கு திட்டம் போட்டு, ஏறக்குறைய ரூ. 48,000 திரட்டியிருக்கிறார்கள். அரசு ரூ. 25,000 அளித்து இருக்கிறது. விரைவில் திருச்சியில் அமைக்கப் போகிறார்கள்.

திரு. இ. எஸ். தியாகராாசன்: தலைவரவர்களே, அரசு உயர் நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களுக்குப் பதிலாக செகண்டரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதைத் தடுத்து தமிழ் ஆசிரியர்களையே நியமிக்க முதலிடம் தரப்படுமா?

(விடை இல்லை)

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருச்சியில் அமைய இருக்கும் புலவர் குழுக் கட்டடத்திற்கு மொத்தம் எவ்வளவு மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே நான் முதலிலேயே சொன்னேன், ரூ. 1 லட்சம்.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அமைக்கப்பட்டு இருக்கிற அந்தப் புலவர் குழு எத்தகைய தமிழ்ப் பணிகள் செய்து வருகிறது என்பதையும், அந்தப் புலவர் குழுவுக்காகக் கட்டப்படும் கட்டடம் தமிழ் வளர்த்த மதுரையில் கட்ட அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தக் கட்டடம் அந்த இடத்தில் கட்டப்பட வேண்டுமென்று முடிவு செய்தது புலவர் குழு. அதிலே 49 கவிஞர்கள் இருக்கிறார்கள். இலக்கண, இலக்கிய புலவர்கள் அதில் இடம் பெற்று, பல்வேறு இடங்களுக்குச் சென்று தமிழ் வளர்ப்பது பற்றியும், தமிழில் ஆர்வம் ஊட்டுவது பற்றியும் ஆகிய பணிகளைச் செய்து வருகிறார்கள். இப்போது கூட இரண்டு நாட்களுக்கு முன்பு டெல்லிக்குப் போயிருக்கிறார்கள். ஏற்கெனவே பம்பாயிலும் அவர்களுக்கு நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டது. இப்படித் தமிழுக்கு ஆக்கம் தரும் பணியில் ஈடுபட்டிருக்கும் அந்தப் புலவர் குழு தான் திருச்சியில் இடவசதி இருக்கிறது என்றும், நிதி திரட்ட வசதியிருக்கிறது என்றும் சொல்லி திருச்சியில் கட்டுவதாக முடிவு செய்திருக்கிறார்கள்.